# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண். 12/2025

### அ.சா. 4 (LW 4 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. கணேசன்** | **தொழில்** | |
| த **பெயர்** | இருளப்பன் சேர்வை | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **11.03.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மணப்பாறையில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். வழக்கில் இறந்த இருளப்பன் ராசு என் அப்பா ஆவார். அ.சா.1 என் அம்மா ஆவார். சம்பவத்தின் போது நான் புதுப்பட்டி பொன்மாந்துரையில் குடும்பத்துடன் குடியிருந்து வந்தோம். நான், அப்பா, அம்மா, ஆயா வீரம்மாள், தங்கை ரஞ்சனி ஆகியோருடன் 15 ஆண்டுளாக குடியிருந்து வந்தேன். எனது அப்பாவுக்கு பூர்வீக நிலம் உள்ளது. நான் குடியிருந்த வீடு அப்படியே உள்ளது. பூர்வீக வீடு பிரச்சனை இருந்தது தெரியாது. ஆஜர் எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள். என் அப்பா இறந்த பின்பு மணப்பாறைக்கு சென்று விட்டோம். என் அப்பா திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அடிபட்ட நிலையில் பார்த்தேன்.என்ன சம்பவம் நடந்தது என எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநியம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

என் அப்பாவுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக வீட்டை நீண்ட நாட்களாக விற்க முடியாமல் இருந்ததால் ரெங்கமூர்த்தியும்,சண்முகமும் விற்று கொடுத்த விவரம் எனக்கு தெரியும் . வீடு விற்றது சம்மந்தமாக கமிசன் பட்டுவாடாவில் ரெங்கமுத்துக்கும் எனது அப்பாவுக்கும் பிரச்சனை நடந்து வந்தது பற்றி தெரியாது. 07.08.2023 அன்று மதியம் 02.30 மணி அளவில் நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது அப்போது என்

அம்மா போன் செய்து என் அப்பாவை கொலை செய்து விட்டதாக சொன்னார்கள். நான் திண்டுக்கல் அரசுமருத்துவமனை சென்று என் அப்பாவை பார்த்தேன். என் அம்மா மேற்படி பூர்வீக வீடு விற்றதில் கமிசன் பிரச்சனை இருந்ததாக சொன்ன விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அந்த முன்பகை காரணமாகத்தான் எதிரிகள் அரிவாள், கத்தி போன்ற ஆயுதங்களுடன் என் அம்மா வீட்டில் இருக்கும் போது என் அப்பாவை தலையில் வெட்டி காயப்படுத்தினார்கள் என்று எனது அம்மா நான் காலேஜில் இருந்த போது போனில் சொன்னார் என்றால் சரிதான். எதிரிகளின் பெயர் சொல்லவில்லை. நானும் எதிரிகளும் ஒரே ஊர்தான். எதிரிகள் மீது பல குற்ற வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். நான் எதிரிகளுக்கு பயந்து மணப்பாறையில் குடியிருந்து வருகிறோம், எனது அப்பா இறந்து விட்டதால் மணப்பாறையில் உள்ளோம்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என் அப்பாவுக்கு யாருடனும் முன்விரோதம் இல்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.11 22:15:03 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.